சார்பு நீதிமன்றம், இலால்குடி

முன்னிலை:– திருமதி.R.மோகனா, B.L.,

சார்பு நீதிபதி, இலால்குடி.

2025 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 23 ம் நாள் புதன்கிழமை

I.A.No.4/2024 in OS.No.117/2020

(CNR.No.TNTP180003712020)

K. முனைவர் ஜஹான் ......மனுதாரர்/வாதி

/எதிர்//

1. A. முகமது யூசுப்

2. S. நூர்ஜஹான்

3. A. நூர்ஜஹான்

4. A. நிஜாமுதீன்

5. A.யூனிஸ்

6. A. அப்துல் ரஷீத்

7. R. ரஷீதா பேகம்

8. பாவா சாஹிப் ....எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்.

இம்மனுவானது 24.03.2025 ஆம் தேதியன்று இறுதி விசாரணைக்காக இந்நீதிமன்றத்தின் முன்பு வந்தபோது மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.அன்னாதுரை அவர்கள் முன்னிலையாகியும், 8 ஆம் எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.சுப்பையா அவர்கள் முன்னிலையாகியும், 1 முதல் 7 எதிர்மனுதாரர் தோன்றாதரப்பினராகிவிட்ட நிலையிலும் இருதரப்பு வாத உரைகளை கேட்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும், இதுநாள்

வரையில் இந்நீதிமன்றத்தின் பரிசீலனையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்....

## உத்தரவு

மனுதாரர்/வாதி தாக்கல் செய்துள்ள மனுவினை ஏற்று, மனுவில் கூறியுள்ள விவரங்களை மனுதாரர்/வாதி தரப்பு சாட்சியமாக பதிவு செய்ய மனுதாரர்/வாதி தரப்பு சாட்சியத்தை மீண்டும் அழைத்து உத்தரவிட கோரி கட்டளை 18 விதி 17 மற்றும் பிரிவு 151 சிபிசி–யின் கீழ் மனுதாரரால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. மனுவின் சுருக்கம் –

மனுவின் மனுதாரர் அசல் வழக்கின் வாதி. வழக்கு விவரங்கள் அனைத்தும் வாதிக்கு நன்கு தெரியும். அசல் வழக்கினை பாக பிரிவினை மற்றும் மனுதாரருக்கு உரிய பங்கினை வழங்குதல் குறித்தும், பிற பரிகாரங்கள் கோரியும் மனுதாரர் தாக்கல் செய்துள்ளார். மனுதாரர் இ.ம.எண்.3/2024 மனு தாக்கல் செய்து மனுதாரரின் மூதாதையரால் ஸ்ரீரங்கம் சார்பதிவாளர் அலுவலகத்தில் 3 வது புத்தகம் பாகம் 21, பக்கம் 30 முதல் 32 வரை ஆவண எண்.9/1919 ஆக பதிவு செய்யப்பட்டுள்ள உயில் ஆவணத்தை பெற்றுதரக்கோரி தாக்கல் செய்திருந்த மனு கடந்த 20.06.2024 ஆம் தேதியன்று மாண்புமிகு நீதிமன்றத்தால் தள்ளுபடி செய்து உத்தரவிடப்பட்டுள்ளது. மேற்படி உத்தரவால் மனுதாரர் மனுவில் கோரிய பதிவு செய்யப்பட்ட உயில் ஆவணர் யார் யாருக்கு எழுதிக் கொடுக்கப்பட்டது என்பதை விளக்க மனுவிலோ வழக்குரை சங்கதிகளிலோ எடுத்துரைக்கவில்லை என்பதால் அதற்கான சான்று நகல் வழக்குரையில்

தாக்கல் செய்வதற்கு இதுநாள்வரை நடவடிக்கை எடுக்கவில்லை என்பதாலும் எந்தவொரு ஆவணமும் சார்பதிவாளர் அலுவலகத்தில் தாக்கல் செய்யாமல் நேரடியாக மாண்புமிகு நீதிமன்றத்தில் மனுவினை தாக்கல் செய்துள்ளதாக இந்நீதிமன்றம் முடிவு எடுத்துள்ளதாக மேற்கூறியுள்ள ஆவணத்தை ஸ்ரீரங்கம் சார்பதிவாளர் அலுவலகத்தில் பெறுவதற்கு மனுதாரர் பல்வேறு முயற்சிகள் எடுத்துள்ளார். மேற்படி ஆவணங்களை சான்றிட்டு வழங்க மாண்புமிகு நீதிமன்றத்தில் உத்தரவு வேண்டும் என்றும் சார்பதிவாளர் அலுவலகத்தில் மனுதாரருக்கு வாய்மொழியாக அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. அதனால் மேற்கூறிய ஆவணத்தை பெற நீதிமன்றம் உத்தரவிடக்கோரி தாக்கல் செய்துள்ள இ.ம.எண்.3/2024 மனுவினை மாண்புமிகு நீதிமன்றத்தில் மனுதாரர் தாக்கல் செய்திருந்தார் அது பற்றிய விவரங்களை மனுதாரர் தரப்பு சாட்சியத்தில் பதிவு செய்ய மனுதாரர் தரப்பு சாட்சியத்தை மீண்டும் அழைக்க உத்தரவிடக்கோரி தாவா மனு தாக்கல்

3. <u>8 ஆம் எதிர்மனுதாரர் தாக்கல் செய்துள்ள எதிருரையின் சுருக்கம்</u> –

ஒப்புக்கொள்ளப்பட்ட மற்றும் ஏற்றுக்கொள்ளும் சங்கதிகளை தவிர மற்றவைகளை மனுதாரரே நிரூபிக்க கடமைபட்டவர். மனு சட்டப்படிக்கும் நியாயப்படிக்கும் நிலைநிற்கத்தக்கதல்ல. வாதி பாகப்பிரிவினை பரிகாரம் கோரி வழக்கினை தாக்கல் செய்துள்ளார். மனு பிரமாண வாக்குமூலம் பத்தி 5ல் சொல்லியுள்ள சங்கதிகளின்படி ஆவணத்தினை பெறுவதற்கு உத்தரவிடக்கோரி இ.ம.எண்.3/2024 மனுவினை தாக்கல் செய்தார் என்றும் அது பற்றிய விவரங்களை மனுதாரர் தரப்பு சாட்சியத்தில் பதிவு செய்ய மனுதாரை மீண்டும் அழைக்க அனுமதித்து உத்தரவிடக்கோரி மனு தாக்கல்

செய்துள்ளதாக கூறுவது முற்றிலும் தவறானது. ஏற்கனவே மாண்புமிகு நீதிமன்றத்தால் முடிவு செய்யப்பட்ட சங்கதிகளை மீண்டும் சாட்சியத்தில் பதிவு செய்வதற்கு மனுதாரர் மனு தாக்கல் செய்துள்ளது சட்டத்திற்கு புறம்பானது. விடுபட்ட சங்கதிகளை வாதி தரப்பில் மீண்டும் நிரப்புவதற்கும் வழக்குரையில் சொல்லப்படாத சங்கதிகளை வாதி தனது சாட்சியத்தில் நிரப்ப முயற்சி செய்வதால் மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும். மனுதாரர் தரப்பில் கடந்த 17.07.2023 ஆம் தேதியன்று வாதி தரப்பு விசாரணை சாட்சியம் ஆரம்பிக்கப்பட்டு இன்றைய தினம் வரை வாதி தரப்பு மற்ற சாட்சிய விசாரணைக்காக வழக்கு வாய்தா வழங்கப்பட்டுள்ள நிலையில் வாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள இந்த மனுவானது வழக்கினை இழுத்தடிக்க வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்த எதிர்மனுதாரர் மூத்த குடிமகன். அவருக்கு 70 வயதிற்கு மேல் ஆகின்றது. எனவே மனுவினை அதிகப்பட்ச செலவு தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என்று எதிருரை தாக்கல்.

**4**. மனுதாரர் மற்றும் 8 ஆம் எதிர்மனுதாரர் தரப்பில் சாட்சிய சான்றாவணங்கள் எதுவும் சமர்பிக்கப்படவில்லை. வழக்கு கோப்புகள் பார்வையிடப்பட்டன.

**5**. <u>தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சனை</u> – இம்மனு அனுமதிக்கத்தக்கதா இல்லையா? என்பதே ஆகும்.

**6**. மனுதாரர்கள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் வாதத்தில், மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்த மனுதாரரின் மூதாதையரால் ஸ்ரீரங்கம் சார்பதிவாளர் அலுவலகத்தில் ஆவண எண்.9/1919 ஆக பதிவு செய்யப்பட்ட உயில்

ஆவணத்தை பெற்றுத்தரக்கோரி தாக்கல் செய்த மனு எண்.3/2024 மனு சமூகம் நீதிமன்றத்தால் கடந்த 20.06.2024 ஆம் தேதியன்று தள்ளுபடி செய்யப்பட்டுள்ளதாகவும் மேற்படி உயில் ஆவணத்தை மனுதாரர் ஸ்ரீரங்கம் சார்பதிவாளர் அலுவலகத்தில் இருந்து பெறுவதற்கு பல்வேறு முயற்சிகள் எடுத்துள்ளதாகவும் அந்த ஆவணத்தை சான்றிட்டு வழங்குவதற்கு இந்நீதிமன்ற உத்தரவு தேவை என்று சார்பதிவாளர் வாய்மொழியாக அறிவுரை வழங்கியதால் மனுதாரர் மேற்படி ஆவணத்தை நீதிமன்றம் மூலம் வரவழைப்பதற்கு மனு தாக்கல் செய்திருந்ததாகவும் ஆனால் சான்று நகலை வழக்குரையுடன் தாக்கல் செய்வதற்கு இதுநாள் வரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று இந்நீதிமன்றம் முடிவு எடுத்துள்ளதால் அதனை பற்றி மனுதாரர் தரப்பு சாட்சியத்தில் எடுத்துரைப்பதற்கு வாய்ப்பு வழங்கி வா.சா.1 சாட்சியத்தை மறு அழைப்பு செய்ய அனுமதிக்க கோரி தாவா மனு தாக்கல் செய்துள்ளதாகவும் மனுதாரர் /வாதி தரப்பு வழக்கினை நிரூபணம் செய்வதற்கு மேற்படி சாட்சியம் அவசியமானது என்பதால் வா.சா.1 சாட்சியத்தை மீண்டும் அழைக்க அனுமதித்து மனுவினை அனுமதித்து உத்தரவிட வேண்டும் என்று வாதிடப்பட்டது.

**7**. 8 ஆம் எதிர்மனுதாரர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் வாதத்தில், மனுதாரர்/வாதி தரப்பில் வழக்குரையில் எடுத்துரைக்காத சங்கதிகள் குறித்து சாட்சியம் அளிக்க அனுமதிக்க இயலாது என்றும் இ.ம.எண்.3/2024 மனுவில் தீர்வு கண்டுள்ள சங்கதிகளை பொறுத்தும் சாட்சியமாக பதிவு செய்ய அனுமதிக்க இயலாது என்றும் மனுதாரருக்கு தாவா சொத்து எவ்வாறு கிடைத்தது என்று வழக்குரையில் ஏற்கனவே கூறியுள்ளது பொறுத்து நிரூபிக்க

வேண்டிய நிலையில் புதிய மற்றும் விடுபட்ட சங்கதிகளை நிரப்புதற்காக தாக்கல் செய்துள்ள தாவா மனு ஏற்கத்தக்கதல்ல மற்றும் மனு நிலைக்கத்தக்கதல்ல என்பதால் தாவா மனுவினை தள்ளுபடி செய்து உத்தரவிட வேண்டும் என்று வாதிடப்பட்டது.

8. அசல் வழக்கு பாகப்பிரிவினை மற்றும் இதர பரிகாரங்கள் கோரி மனுதாரர்/ வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வழக்கு சொத்து மனுதாரரின் தகப்பனார் அப்துல் லத்தீப் சாயபு அவர்களின் தாயார் மதார்பீபி–க்கு கூட்டு பாத்தியமான சொத்து என்றும் தாவா சொத்திற்கான கூட்டு பட்டாவில் மரியம் பீபி, மதார் பீபி மற்றும் அமீர் பீபி ஆகியோர்கள் பெயரில் கூட்டாக பதிவு உள்ளதாகவும் மேற்படி மூவரும் இறந்து விட்டார்கள் என்பதால் அவர்களின் வாரிசுகளுக்கு எதிராக பாகப்பிரிவினை பரிகாரம் கோரி தாவா வழக்கு தாக்கல் செய்துள்ளதாகவும் மேற்படி மதார் பீபி விட்டு சென்ற சொத்துக்களுக்கு மனுதாரர்/வாதியின் தகப்பனாரும், தாயாரும் இறந்த பிறகு மனுதாரர் ஒரே வாரிசாக இருந்து வருவதாகவும் மனுதாரர்/வாதியின் தகப்பன்வழி பாட்டி மதார் பீபிக்கு தாவா சொத்தில் உரிமைமூலம் உள்ளது என்றும் அவரின் ஒரே வாரீசான மனுதாரருக்கு தாவா சொத்தில் உரிமை உள்ளது என்று வழக்குரையில் கூறி வாதியால் தாவா வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

9. எதிர்மனுதாரர்/8 ஆம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் தாவா சொத்து உண்மையில் அப்துல் லத்தீப் சாயபு அவர்களின் மனைவி மரியம் பீபி க்கு பாத்தியமானது என்றும் மேற்படி மரியம் பீபிக்கு கடந்த 09.06.1927 ஆம் ஆண்டு ஒரு சையிதா முகம்மது சாயபு பாரியாள் பாத்திமா பீபி அவர்களால் இனாம் சாசனம் எழுதி வைக்கப்பட்டு மேற்படி

மரியம்பீபி அவர்கள் அனுபவித்து அவர் இறப்பிற்கு பிறகு வாரிசுதாரர் முறையில் அவரின் கணவர் அப்துல் லத்தீப் சாயபு அவர்கள் கடந்த 10.10.1931 ஆம் தேதி அமர்பீபி அம்மாள் மற்றும் அவரது மைனர் மகள் ரசலம்மாள் மற்றும் காதர் சாயபு மனைவி மதார் பீபி ஆகிய மூவரிடம் கிரையம் செய்து கொடுத்து விட்டார் என்றும் அவர்களின் இறப்பிற்கு பின்பு வாரிசுதாரர் என்ற முறையில் காதர் சாயபு அனுபவித்து அதன்பின்னிட்டு 8 வது பிரதிவாதி மற்றும் அவரது சகோதரர்கள் அனுபவித்து வருவதாகவும் ஒரே பெயரில் பல நபர்கள் இருப்பதை சாதகமாக பயன்படுத்தி கொண்டு வாதி தாவா வழக்கை தாக்கல் செய்துள்ளதாக எதிர்வழக்குரையில் வாதம் எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

**10**. மனுதாரர்/வாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள வழக்குரையில் தற்போதைய மனுவிலும் இ.ம. எண் 3/2024 மனுவிலும் கூறியுள்ளபடி தாவா சொத்து குறித்து மனுதாரரின் முன்னோர்களால் ஏற்படுத்தப்பட்ட ஆவண எண். 9/2019 என்ற உயில் ஆவணம் பற்றிய விபரத்தை வழக்குரையில் மனுதாரர் தரப்பில் எடுத்துரைக்கவில்லை என்பது குறிப்பிடதக்கது. மேலும் மேற்படி உயில் பற்றிய விபரம் எப்படி மனுதாரருக்கு தெரியவந்தது என்பதையும் அதன் அசல் ஆவணம் எங்குள்ளது என்பது பற்றிய விபரங்களையும் மனுதாரர் வழக்குரையில் எடுத்துரைக்காமல் பின்னிட்டு அதனை சாட்சியத்தில் எடுத்துரைப்பதற்காக தற்போதைய மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**11**. ஆவண எண்.9/1919 ஆம் தேதியிட்ட உயில் ஆவணத்தை பற்றி வாதி வழக்குரையில் எந்த இடத்திலும் குறிப்பிட்டு சொல்லவில்லை. வழக்கு சொத்தின் உரிமை வாதிக்கு வாரிசுரிமை படி கிடைத்துள்ளதாகவும் மதார் பீபியின் வாரிசுதாரர் என்ற முறையில் கூட்டு உரிமையாளராக தாவா வழக்கில்

பாகப்பிரிவினை பரிகாரம் கோரியுள்ளதாக வாதி வழக்குரையில் தெளிவாக ஏற்கனவே எடுத்துரைத்துள்ள சங்கதிகளுக்கு விரோதமாக முன்னோர்கள் எழுதிவைத்ததாக கூறும் உயில் ஆவணம் பற்றி சாட்சியம் அளிக்க அனுமதி கோரி தற்போதைய தாவா மனுவினை தாக்கல் செய்துள்ளார் என்பதால் வழக்குரையில் எடுத்துரைக்காத சங்கதிகளை பொறுத்து சாட்சியம் அளிப்பதற்காக தாக்கல் செய்துள்ள தாவா மனுவில் மனுதாரருக்கு ஆதரவாக முதல்நிலைநோக்கு இல்லை என்று இந்நீதிமன்றம் கருதி மனுதாரரின் மனுவில் தகுந்த வாதம் இல்லை என்பதால் மனுவை தள்ளுபடி செய்யலாம் என இந்த மனுவில் இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

**இறுதியாக,** மனு செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது.

இவ்வுத்தரவானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு இன்று **2025 ம் வருடம் ஏப்ரல் மாதம் 23 ம் நாள்** அவையறிய பகரப்பட்டது.

ஒப்பம்.திருமதி.R.மோகனா, B.L.,
சார்பு நீதிபதி,
இலால்குடி.

<u>**சான்றாவணங்களின் பட்டியல்**</u>

<u>மனுதாரர் மற்றும் 8 ஆம் எதிர்மனுதாரர் தரப்பு</u>
<u>சாட்சி மற்றும் சான்றாவணம்</u> – இல்லை

ஒப்பம்.திருமதி.R.மோகனா, B.L.,
சார்பு நீதிபதி,
இலால்குடி.

Subordinate Court Lalgudi
**IA.No.4/2024 in OS.No.117/2020**
/உண்மை நகல்/ Draft / Fair Order
<u>**Date – 23.04.2025**</u>